ICBC 中国工商银行

# INDUSTRIAL AND COMMERCIAL BANK OF CHINA LIMITED

(Incorporated in The People's Republic of China)


தலைமை அலுவலகம்: 55 Fuxingmennei Avenue, Xicheng District, Beijing, China 100140 Tel: 86-10-6610 6114

சிங்கப்பூர் கிளை : 6 Raffles Quay #12-01, Singapore 048580 Tel: 6538 1066 Fax: 6538 1370


## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலவர அறிக்கை

2025 டிசம்பர் 31-ல் முடிவுற்ற ஆண்டுக்கானது
(RMB மில்லியனில்,மாற்று நாணயம் குறிப்பிடாத வரை)

| | 2025 | 2024 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| ரொக்கம் மற்றும் மத்திய வங்கிகளின் இருப்புகள் | 3,674,558 | 3,322,911 |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்து வர வேண்டியவை | 1,264,019 | 1,219,876 |
| சார்பிய (டெரிவேட்டிவ்) நிதிச் சொத்துக்கள் | 130,414 | 222,361 |
| எதிர் மறு கொள்வினை ஒப்பந்தங்கள் | 530,737 | 1,210,217 |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முன் தொகைகளும் | 29,712,359 | 27,613,781 |
| நிதி முதலீடுகள் | 16,907,415 | 14,153,576 |
| - லாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான மதிப்பில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி முதலீடுகள் | 943,953 | 1,010,439 |
| - இதர விரிவான வருமானத்தின் மூலம் நியாயமான மதிப்பில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி முதலீடுகள் | 3,823,279 | 3,291,152 |
| - குறைக்கப்பட்ட அடக்கவிலையின் (அமோர்டைஸ்டு காஸ்ட்) அடிப்படையிலான நிதிநிலை முதலீடுகள் | 12,140,183 | 9,851,985 |
| இணை நிறுவனங்களில் மற்றும் கூட்டு முயற்சிகளில் உள்ள முதலீடுகள் | 78,313 | 73,357 |
| சொத்து மற்றும் உபகரணங்கள் | 293,836 | 302,387 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள் | 104,289 | 90,047 |
| இதர சொத்துக்கள் | 781,833 | 613,233 |
| **மொத்த சொத்துக்கள்** | **53,477,773** | **48,821,746** |
| **கடன் பொறுப்புகள்** | | |
| மத்திய வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 176,793 | 169,622 |
| வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டிய தொகை | 5,103,247 | 4,590,965 |
| லாபம் அல்லது நஷ்டம் மூலம் நியாய மதிப்பில் அளவிடப்படும் கடன்கள் | 150,196 | 76,056 |
| சார்பிய (டெரிவேட்டிவ்) நிதி கடன் பொறுப்புகள் | 134,082 | 197,795 |
| மறுகொள்முதல் ஒப்பந்தங்கள் | 2,536,376 | 1,523,555 |
| வைப்புத் தொகை சான்றிதழ்கள் | 502,593 | 445,419 |
| வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 37,311,778 | 34,836,973 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 23,374 | 31,880 |
| வெளியிடப்பட்ட கடன் பத்திரங்கள் | 2,216,807 | 2,028,722 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி கடன் பொறுப்புகள் | 6,551 | 4,278 |
| இதர கடன் பொறுப்புகள் | 1,043,952 | 929,215 |
| **மொத்த கடன் பொறுப்புகள்** | **49,205,749** | **44,834,480** |
| **சொத்து மதிப்பு (ஈக்விட்டி)** | | |
| தாய் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு உரித்தான பங்கு மூலதனம் | | |
| பங்கு மூலதனம் | 356,407 | 356,407 |
| மற்ற பங்குசார் கருவிகள் | 384,657 | 324,344 |
| முன்னுரிமைப் பங்குகள் | 114,927 | 134,614 |
| நிரந்தரப் பத்திரங்கள் | 269,730 | 189,730 |
| காப்பு நிதிகள் | 1,323,043 | 1,275,004 |
| தேக்கி வைக்கப்பட்ட லாபங்கள் | 2,180,152 | 2,014,086 |
| | 4,244,259 | 3,969,841 |
| கட்டுப்பாடில்லாத பங்கு உரிமை | 27,765 | 17,425 |
| **மொத்த பங்குமுதல்** | **4,272,024** | **3,987,266** |
| **மொத்த பங்குமுதல் மற்றும் கடன் பொறுப்புகள்** | **53,477,773** | **48,821,746** |

## ஒருங்கிணைக்கப்பட்ட லாப அல்லது நட்ட அறிக்கை

2025 டிசம்பர் 31 முடிவுற்ற ஆண்டுக்கானது
(RMB மில்லியன் மாற்று நாணயம் குறிப்பிடாத வரை)

| | 2025 | 2024 |
|---|---|---|
| வட்டி வருமானம் | 1,331,831 | 1,427,948 |
| வட்டிச் செலவினம் | (696,705) | (790,543) |
| **நிகர வட்டி வருமானம்** | **635,126** | **637,405** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 126,722 | 126,177 |
| கட்டணம் மற்றும் தரகு செலவு | (15,551) | (16,780) |
| **நிகரக் கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **111,171** | **109,397** |
| நிகர வர்த்தக வருமானம் | 18,510 | 19,440 |
| நிதிநிலை முதலீடுகளின் மீதான நிகர லாபம் | 34,806 | 22,961 |
| மற்ற செயல்பாட்டு வருமானம்/(செலவு), நிகரம் | 1,782 | (3,077) |
| **இயக்க வருமானம்** | **801,395** | **786,126** |
| இயக்க செலவுகள் | (246,874) | (242,155) |
| கடன் மதிப்புக்குறைவு இழப்புகள் | (132,973) | (125,739) |
| மற்றச் சொத்துகளில் மதிப்புக்குறைவு இழப்புகள் | (1,887) | (924) |
| **இயக்கு லாபம்** | **419,661** | **417,308** |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளின் லாபப் பங்குகள் | 4,774 | 4,519 |
| **வரிவிதிப்புக்கு முந்தைய லாபம்** | **424,435** | **421,827** |
| வருமான வரி செலவினம் | (53,669) | (54,881) |
| **ஆண்டுக்குரிய லாபம்** | **370,766** | **366,946** |
| ஆண்டுக்குரிய லாபம் சேரவேண்டிய தொகை: | | |
| தாய் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு | 368,562 | 365,863 |
| கட்டுப்பாடில்லாத நலன்கள் | 2,204 | 1,083 |
| **ஆண்டுக்குரிய லாபம்** | **370,766** | **366,946** |
| **ஒவ்வொரு பங்குக்கான வருமானம்** | | |
| – அடிப்படை (RMB யுவான்) | **1.00** | **0.98** |
| – தளர்த்தப்பட்டது (RMB யுவான்) | **1.00** | **0.98** |

## ஒருங்கிணைக்கப்பட்ட லாப அல்லது நட்ட மற்றும் இதர விரிவான வருமான அறிக்கை

2025 டிசம்பர் 31 முடிவுற்ற ஆண்டுக்கானது
(RMB மில்லியன் மாற்று நாணயம் குறிப்பிடாத வரை)

| | 2025 | 2024 |
|---|---|---|
| **ஆண்டுக்குரிய லாபம்** | 370,766 | 366,946 |
| இதர விரிவான வருமானம் (வரி விதிப்புக்குப் பின், நிகர): | | |
| (a) லாப நட்ட கணக்கிற்கு மறுவகை படுத்தப்படாதவைகள்: | | |
| (i) இதர விரிவான வருமானத்தின் வழியாக நியாய மதிப்பில் கணக்கிடப்பட்ட பங்கு கருவிகளின் நியாயமான மதிப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் | 1,432 | 3,769 |
| (ii) பங்குமுதலான அடிப்படையில் கணக்கிடப்பட்ட இதர விரிவான வருமானம் | 0 | 43 |
| (iii) மற்றவை | 16 | 24 |
| (b) பிற லாப நட்ட கணக்குக்கு மறுவகைப்படுத்தக் கூடியவைகள்: | | |
| (i) இதர விரிவான வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நியாயவிலைக் கடன் கருவிகளின் நியாயவிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் | (27,818) | 54,514 |
| (ii) இதர விரிவான வருமானத்தின் அடிப்படையில் நியாயமதிப்பில் கணக்கிடப்பட்ட கடன் கருவிகளின் கடன் இழப்புகள் | (142) | (269) |
| (iii) பணப்புழக்க பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு | 775 | (1,332) |
| (iv) பங்குமுதலான அடிப்படையில் கணக்கிடப்பட்ட இதர விரிவான வருமானம் | (346) | (58) |
| (v) வெளிநாட்டு பண பரிவர்த்தனை வித்தியாச ஒதுக்கீடு | (8,615) | 9,744 |
| (vi) மற்றவை | 4,310 | (15,246) |
| ஆண்டுக்குரிய இதர விரிவான வருமானக் கூட்டுத்தொகை | (30,388) | 51,189 |
| ஆண்டுக்குரிய இதர விரிவான மொத்த வருமானம் | 340,378 | 418,135 |
| ஆண்டுக்குரிய மொத்த வருமானம் பின்வருவோருக்கு உரியது: | | |
| தாய் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு | 339,186 | 418,252 |
| கட்டுப்பாடில்லாத நலன்கள் | 1,192 | (117) |
| | 340,378 | 418,135 |

தணிக்கை செய்யப்பட்ட வங்கியின் நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த அங்கமாக குறிப்புகள் உள்ளன, மேலும் வங்கியின் தணிக்கை செய்யப்பட்ட முழு நிதிநிலை அறிக்கைகளையும் பார்க்காமல், அவற்றையும் வங்கியின் நிதிநிலவரத்தைப் பற்றியும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. வங்கியின் ஆண்டறிக்கையுடன், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள குறிப்புகள் மற்றும் துணை நிறுவனங்களின் பட்டியல் ஆகியவற்றை கீழ்க்கண்ட முகவரியில் பெறலாம்: Industrial and Commercial Bank of China Limited, சிங்கப்பூர் கிளை, 6 Raffles Quay, #12-01 Singapore 048580, அல்லது இணையதளத்தில் (www.icbc-ltd.com) பெற்றுக் கொள்ளலாம்.

## மூலதனப் போதுமான தன்மை வீதம்

(RMB,மில்லியன் விழுக்காடுகள் தவிர்த்து)

| பட்டியல் | 31 டிசம்பர்2025 | 31 டிசம்பர்2024 |
|---|---|---|
| **நிகர மூலதன அடிப்படை** | 5,302,796 | 4,986,531 |
| **நிகர பொது பங்கு அடுக்கு 1 மூலதனம்** | 3,837,149 | 3,624,342 |
| **ஆபத்து-அளவிடப்பட்ட சொத்துக்கள்** | 28,269,948 | 25,710,855 |
| **பொது பங்கு அடுக்கு 1 மூலதனப் போதுமான தன்மை வீதம்** | 13.57% | 14.10% |
| **அடுக்கு 1 மூலதனப் போதுமான தன்மை வீதம்** | 14.94% | 15.36% |
| **மூலதனப் போதுமான தன்மை வீதம்** | 18.76% | 19.39% |

வங்கிக்கைப்பற்றல், கலைத்தல் அல்லது அதற்கு இணையான செயல்முறைகள் நடைமுறைக்கு வந்தால், வங்கி நிறுவப்பட்ட நாட்டின் சட்டங்களின் அடிப்படையில், உள்நாட்டு வைப்பு முதலீட்டாளர்களுக்கு மேலாக வெளிநாட்டு கிளைகளில், சிங்கப்பூர் கிளை உள்பட, உள்ள வைப்பு முதலீட்டாளர்களுக்கு குறைந்த முன்னுரிமை வழங்க வேண்டும் என, அவ்வங்கி பதிவு செய்யப்பட்ட நாட்டின் சட்டங்கள் எதையும் கோருவதில்லை.

## வங்கியின் இயக்குநர்கள் மற்றும் உயர் மேலாண்மை

| பெயர் | பதவி |
|---|---|
| Liao Lin | Chairman, Executive Director |
| Liu Jun | Vice Chairman, Executive Director, President, Chief Compliance Officer |
| Duan Hongtao | Executive Director |
| Wang Jingwu | Executive Director, Senior Executive Vice President, Chief Risk Officer |
| Cao Liqun | Non-executive Director |
| Dong Yang | Non-executive Director |
| Zhong Mantao | Non-executive Director |
| Norman Chan Tak Lam | Independent Non-executive Director |
| Herbert Walter | Independent Non-executive Director |
| Murray Horn | Independent Non-executive Director |
| Chen Guanting | Independent Non-executive Director |
| Li Weiping | Independent Non-executive Director |
| Lee Kam Hung Lawrence | Independent Non-executive Director |

## சுயேட்சியான தணிக்கையாளரின் அறிக்கை

Industrial and Commercial Bank of China Limited-ன் பங்குதாரர்களுக்கு
(சீன மக்கள் குடியரசில் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் பதிவுசெய்யப்பட்டது)

### கருத்து

நாங்கள் "இண்டஸ்ட்ரியல் அண்ட் கமர்ஷியல் பேங்க் ஆஃப் சைனா லிமிடெட்" ("வங்கி") மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (ஒட்டுமொத்தமாக "குழுமம்" என்று குறிப்பிடப்படுகிறது) ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்துள்ளோம். அவற்றில், 31 டிசம்பர் 2025 அன்றைய நிலவரப்படியான நிதி நிலையின் ஒருங்கிணைந்த அறிக்கை, லாபம் அல்லது நட்டத்தின் அறிக்கை, மற்றும் வருமான ஒருங்கிணைந்த அறிக்கை, பங்குரிமை மாற்றங்களின் அறிக்கை மற்றும் பணப்புழக்க ஒருங்கிணைந்த அறிக்கை மற்றும் முக்கிய கணக்கியல் கொள்கைகள் பற்றிய தகவல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் ஆகியவை அடங்கும்.

எங்கள் கருத்துப்படி, ஒருங்கிணைந்த நிறுவன அறிக்கைகள், 31 டிசம்பர் 2025 அன்றைய நிலவரப்படியான குழுமத்தின் ஒருங்கிணைந்த நிதிநிலை, அதன் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மற்றும் பணப்புழக்கங்கள் பற்றிய உண்மையான மற்றும் நேர்மையான பார்வையை, சர்வதேச கணக்கியல் தரநிலைகள் வாரியம் (IASB) வெளியிட்ட IFRS கணக்கியல் தரநிலைகளின்படி, வழங்குகின்றன மற்றும் வங்கியின் நிறுவனங்கள் சட்டத்தின் வெளிப்படுத்தல் தேவைகளுக்கு இணங்க அறிக்கைகள் முறையாக தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், இவை ஹாங்காங் நிறுவனங்கள் சட்ட வெளிப்படுத்தல் தேவைகளுக்கு இணங்க முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### கருத்தின் அடிப்படை

சர்வதேச தணிக்கைக்கை மற்றும் உத்திமொழித் தரநிலைகள் வாரியம் (IAASB) வெளியிட்ட சர்வதேச தணிக்கைத் தரநிலைகளுக்கு (ISAs) இணங்க எங்கள் தணிக்கையை மேற்கொண்டோம். அந்தத் தரநிலைகளின் கீழ் எங்களுக்குள்ள பொறுப்புகள், எங்கள் அறிக்கையின் "ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள்" என்ற பகுதியில் மேலும் விளக்கப்பட்டுள்ளன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட நிதி தணிக்கை வாரியம், Hong Kong Institute of Certified Public Accountants ("HKICPA") வெளியிட்ட தொழில்முறைக் கணக்காளர்களுக்கான நெறிமுறைக் கோட்பாட்டுக்கு ("கோட்பாடு") இணங்க நாங்கள் இக்குழுமத்திலிருந்து சுயாதீனமாக உள்ளோம். மேலும், அந்தக் கோட்பாடுகளுக்கு இணங்க எங்களது மற்றும் நெறிமுறைப் பொறுப்புகளையும் நிறைவேற்றியுள்ளோம். நாங்கள் பெற்ற தணிக்கைச் சான்றுகள் எங்கள் கருத்திற்கான அடிப்படையை வழங்கும் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் அமைகின்றன என்று நாங்கள் நம்புகிறோம்.

### முக்கிய தணிக்கை விவரங்கள்

முக்கிய தணிக்கை விவரங்கள் எங்கள் தொழில்முறை மதிப்பீட்டின்படி, தற்போதைய காலக்கட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின்படி எங்கள் தணிக்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த விஷயங்கள் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் எங்கள் தணிக்கையின் பின்னணியில் விவாதிக்கப்பட்டன, மேலும் அவற்றை பற்றிய எங்கள் கருத்தை உருவாக்கும் போது அவற்றை கருத்தில் கொண்டோம். எனினும், இந்த விஷயங்கள் குறித்து நாங்கள் தனியே ஒரு கருத்தை வழங்கவில்லை.

இணைப்புகள் தொடர்பான உள்ளிட்ட, எங்கள் அறிக்கையின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்பு விவரங்களில் உள்ள பொறுப்புகளை நாங்கள் நிறைவேற்றுவோம். அதன்படி, ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளில் பொருள்சார் பிழைகளுக்கான இடர்பாடுகள் குறித்து நாங்கள் மேற்கொண்ட மதிப்பீட்டிற்குப் பதிலளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட நடைமுறைகளைச் செயல்படுத்துவதும். எங்கள் தணிக்கையில் உள்ளடங்கியிருந்தது.

### இதர தகவல்கள்

பிற தகவல்களுக்கு வங்கியின் இயக்குநர்கள் பொறுப்பாவர். இப்பிற தகவல்கள் என்பவை, ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அதன் மீதான எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையைத் தவிர, ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் அடங்கும்.

ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் மீதான எங்களின் கருத்து இதர தகவல்களை உள்ளடக்கியதில்ல. மேலும், அது சார்ந்த எந்த உத்தரவாதமும் நாங்கள் வெளியிடுவதில்லை.

ஆண்டறிக்கையில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கு இதர தகவல்களை படித்து, அதில் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளுடன் அல்லது எங்கள் தணிக்கையின் போது எங்களுக்குக் கிடைத்த தகவல்களுடன் முரண்படுகிறதா அல்லது முக்கிய தகவல்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்று பரிசீலிப்பதே எங்கள் பொறுப்பாகும். நாங்கள் செய்த பணியின் அடிப்படையில், இந்த 'பிற தகவல்களில்' கணிசமான பிழை ஏதேனும் உள்ளதென நாங்கள் முடிவெடுத்தால், அச்செய்தியை அறிக்கையிடுவது எங்களின் கடமையாகும். இது தொடர்பாக எங்களுக்கு அறிக்கையிட வேண்டியது வேறு எதுவும் இல்லை.

### ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளுக்கான இயக்குனர்களின் பொறுப்புகள்

IASB-யால் வெளியிடப்பட்ட IFRS கணக்கியல் தரநிலைகள் மற்றும் ஹாங்காங் நிறுவனங்கள் சட்டத்தின் வெளிப்படுத்தல் தேவைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நேர்மையான பார்வையை வழங்கும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு வங்கியின் இயக்குநர்கள் பொறுப்பாவர் மற்றும் மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படும் பொருள்சார்ந்த தவறுகள் ஏதுமின்றி ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பது தேவை என இயக்குநர்கள் கருதும் வகையிலான உள்ளகக் கட்டுப்பாடுகளை அமைப்பதற்கும் அவர்களே பொறுப்பாவர்.

ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும்போது, குழுமத்தின் தொடர்ந்திருக்கும் நிறுவனத் தொடரும் நிலையை மதிப்பிடல், பொருந்தும் இடங்களில், தொடர்ந்திருக்கும் நிறுவனம் தொடர்பான விளக்கங்களை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் வங்கியின் இயக்குநர்கள் குழுமத்தைக் கலைக்க அல்லது செயல்பாடுகளை நிறுத்த விரும்பினால் ஒழிய அல்லது வேறு வழி இல்லையென்றால் ஒழிய தொடர்ந்திருக்கும் நிறுவன அடிப்படையிலான கணக்குப்பதிவியலைப் பயன்படுத்துவதற்கும் வங்கியின் இயக்குநர்கள் பொறுப்பாவர்.

குழுமத்தின் நிதி அறிக்கையில் செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கான வங்கி இயக்குநர்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்குத் தணிக்கைக் குழு உதவுகிறது.

### ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

ஒருங்கிணைந்த பெரும்புத்தகத்தைக் கொண்டவை மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படும் பெரும்புத்தகத்தைக் கொண்டவை அறிக்கை இருக்கின்றனவா என்பது குறித்த நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எங்கள் கருத்தை உள்ளடக்கிய தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எங்கள் நோக்கம் ஆகும். எங்கள் அறிக்கை ஓர் உள்ளடக்கமாக உங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது, வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்ல. இந்த அறிக்கையின் உள்ளடக்கங்களுக்கு நாங்கள் வேறு யாரிடமும் பொறுப்பு ஏற்க மாட்டோம் அல்லது எவ்விதக் கடப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளவோ மாட்டோம்.

நியாயமான உத்தரவாதம் என்பது மிக உயர்ந்த உத்தரவாதம் ஆகும். ஆனால் IASs-களின் அடிப்படையில் செய்யப்படும் தணிக்கையானது ஏதேனும் முக்கிய தவறாக-தகவல் இருப்பின் அது கண்டறியப்பட்டு விடும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. தவறான தகவல்கள் மோசடி அல்லது பிழையால் ஏற்படலாம். மேலும் அவை குழுமத்தின் அல்லது மொத்தமாகவோ அவை ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் அடிப்படையில் பயனர்களால் எடுக்கும் பொருளாதார முடிவுகளை மாற்ற செய்யக்கூடியதாக இருந்தால், அவை முக்கிய தவறான தகவல்களாக கருதப்படும்.

IASs-களுக்கு இணங்க தணிக்கையின் ஒரு பகுதியாக, நாங்கள் தணிக்கை முழுவதும் தொழில்முறை மதிப்பீடு செய்து, தொழில்முறை சந்தேகத்தையும் பேணுகிறோம். மேலும், நாங்கள்:

• ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் மோசடி மற்றும் பிழையால் ஏற்படும் குறிப்பிடத்தக்க தவறான தகவல்களின் அபாயங்களை கண்டு அவற்றிற்கு சாத்தியமான தீர்வையும் மதிப்பிடுகிறோம். எங்களின் கருத்துக்கு அடிப்படையான தணிக்கை ஆதாரங்களைப் பெறுவதற்கு பொருத்தமான மற்றும் பொருந்தும் வகையில் கண்டறியக்கூடிய தணிக்கை நடவடிக்கைகளை வடிவமைத்துச் செயல்படுத்தப்படுகின்றன. பிழையின் காரணமாக ஏற்படும் பொருள்சார்ந்த தவறான கூற்றை கண்டறியத் தவறுவதற்கான அபாயத்தை விட, மோசடியின் காரணமாக ஏற்படும் தவறான கூற்றை கண்டறியத் தவறுவதற்கான அபாயம் அதிகமாகும் ஏனெனில், மோசடி என்பது கூட்டு சதி, போலி ஆவணம் தயாரித்தல் அல்லது வேண்டுமென்றே தகவல்களை வெளியிடாமல் இருப்பது தவறாக குறிப்பிடுவது அல்லது உட்கட்டுப்பாட்டை மீறி செயல்படுவது போன்றவை அடங்கியிருக்கலாம்.

• தணிக்கை நடவடிக்கைகளைத் தகுந்தவாறு வடிவமைப்பதற்கு உள்-கட்டுப்பாட்டை சரிவர புரிந்து கொள்கிறோம். ஆனாலும் குழுமத்தின் உள்-கட்டுப்பாட்டின் செயல்திறனைப் பற்றிய கருத்தை தெரிவிப்பதில்லை.

• பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், செய்யப்பட்ட கணக்கியல் மதிப்பீடும், இவை சார்ந்த தகவல்களையும், இயக்குநர்கள் வெளியிட்ட தகவல்களையும் மதிப்பிடுகிறோம்.

• கிடைத்த தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில் குழுமம் வர்த்தகத்தை தொடர்ந்து நடத்த முடியாத நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் உள்ளனவா என்பதை அறிந்து, இயக்குநர்கள் நிறுவனம் தொடரக்கணக்கு அடிப்படையைப் பயன்படுத்துகின்றனர் என்பதற்கு பொருத்தமான முடிவு எடுக்கிறோம். முக்கியமான நிச்சயமற்ற நிகழ்வுகள் உள்ளன என நாங்கள் முடிவு செய்தால், ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் இத்தகைய கணக்காய்வாளரின் அறிக்கையில் தகவல்களை வெளியிட வேண்டும். அப்படியெனில் தகவல்கள் வெளியிடப் போதுமானதாக இல்லை என்றால் எங்கள் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். எங்களின் முடிவுகள் கணக்காய்வாளர் அறிக்கை வெளியிடும் நாள் வரை கிடைத்த தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையாகக் கொண்டவை. இருந்தாலும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமம் தொடர்ந்து இயங்குவதை நிறுத்திக்கொள்ளும் நிலை ஏற்படலாம்.

• ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் பிரதான பரிமாற்றங்கள் மற்றும் நிகழ்வுகளை நேர்மையாக பிரதிபலிக்கின்றனவா என மதிப்பீடு செய்து, அவற்றின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தகவல்கள் வெளியிடப்பட்ட விதம், அதன் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் பற்றி நியாயமாக வெளிப்படுத்தல்கள் செய்கிறோம்.

• ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் குறித்த கருத்தை உருவாக்குவதற்கான அடிப்படையாக, குழுமத்திற்கு உள்ள நிறுவனம் அல்லது வணிக பிரிவுகளின் நிதி தகவல் தொடர்பான பொருத்தமான பொறுமையான தணிக்கை ஆதாரங்களைப் பெற, குழும தணிக்கையை திட்டமிட்டுச் செயல்படுத்தினோம். குழும தணிக்கையை நோக்கங்களுக்காக செய்யும் தணிக்கைப் பணியின் வழிகாட்டுதல், மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வுக்கு நாங்கள் பொறுப்பு. எங்கள் தணிக்கைக் கருத்துக்கு நாங்கள் மட்டுமே பொறுப்பாவோம்.

திட்டமிடப்பட்ட தணிக்கையின் நோக்கம் மற்றும் காலக்கெடு பற்றியும், எங்களின் தணிக்கையின் போது எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள முக்கிய குறைபாடு உள்பட முக்கியமான தணிக்கை கண்டுபிடிப்புகளைப் பற்றியும், மற்றும் விவரங்களுடன் சேர்த்து, தணிக்கைக் குழுவுடன் நாங்கள் தெரிவிக்கிறோம்.

நாங்கள் சுயேட்சை சார்ந்த நன்னெறி தேவைகளை பூர்த்தி செய்துள்ளோம் என்ற அறிக்கையையும், தணிக்கை குழுவிற்கு தகுந்தவாறு, அதில் எங்கள் சுயேட்சையைப் பற்றிய அனைத்துத் தொடர்புகள் மற்றும் பிற விவரங்களையும், அவற்றைப் பற்றிய அச்சுறுத்தல்களை நீக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் அல்லது பாதுகாப்பு தகவல்களையும் தெரிவிக்கிறோம்.

தணிக்கை குழுவிற்குத் தெரிவித்த விவரங்களிலிருந்து, நடப்பு காலக்கட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் தணிக்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று நாங்கள் தீர்மானிக்கிறோம். எனவே, அவ்விவரங்கள் முக்கிய தணிக்கை விவரங்கள் ஆகும். இந்த விவரங்களை எங்கள் கணக்காய்வாளர் அறிக்கையில் விவரிக்கிறோம், ஆனால் சட்டம் அல்லது நெறிமுறைகள் அந்த விவரத்தை பொதுவெளியில் வெளியிடுவதைத் தடை செய்யாத வரையிலும், அல்லது மிகவும் அரிய சந்தர்ப்பங்களில், அதனால் ஏற்படும் எதிர்மறை விளைவுகள் பொது நன்மை விட அதிகமாக இருக்கும் என்று நாங்கள் முடிவு செய்தால் தவிர, மற்ற அனைத்துச் சூழல்களிலும், இவ்விவரங்களை எங்கள் தணிக்கையாளர் அறிக்கையில் நாங்கள் விவரிக்கிறோம்.

இந்த சார்பான தணிக்கையாளர் அறிக்கையுடன் தொடர்புடைய தணிக்கைக்கான பொறுப்பு கூட்டாளர் சியோங் மிங் யிக், ஹாஃப்மேன் (பயிற்சி சான்றிதழ் எண்: P04626) ஆவார்.

எர்ன்ஸ்ட் & யங்
சான்றளிக்கப்பட்ட பொதுக் கணக்காளர்கள்
ஹாங்காங்

27 மார்ச் 2026